ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வரும் இரு சட்டமுன்வடிவுகளும் ஒரே பொருள் உடையனவாக இருப்பதால் பேரவை உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை வழங்க ஏதுவாக அவற்றை ஒருசேர ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2003). திருவாளர்கள் எஸ்.ஆர்.பி. அவர்கள், வி.கே. லட்சுமணன் ஆகியோர் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை முன்மொழியலாம்.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"19-7-2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2003) இப்பேரவை நிராகரிக்கின்றது"
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிகிறவர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** நான் அதை வழிமொழிகிறேன்.